## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைம் - 2023

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக் கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 வது பந்தியின் பிரகாரம் தேவைப்படும் அல்லது அனுமதிக்கப்படும் போது தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஒன்றுக்கொன்று எதிராக ஈடுசெய்யப்படக்கூடாது என்றாலும், ரூபா 24,129,049 தொகையான நானாவித கடன் மீதியினுள் ரூபா 2,464,299 ஆன செலவு மீதியொன்று சேர்க்கப்பட்டுள்ளது. | பணம் அறவிடுவதற்கும், விலைப்பட்டியல் வழங்குவதற்கும் முறையான கட்டமைப்பு இல்லாததால், இந்த அடையாளம் காணப்படாத பண மீதிகளை நிதி நிலைமைக் கூற்றில் காட்ட வேண்டியுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தனித்தனியாக காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான துங்கன்னாவ தோட்டத்தில் பயன்படுத்தப்பட்ட 101 | துங்கன்னாவ தோட்டத்தினால் பயன்படுத்தப்பட்ட 101 ஆதனங்கள் மற்றும் சொத்து உருப்படிகள், | அதிகாரசபைக்கு சொந்தமான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் பெறுமதியானது ஆதனங்கள் மற்றும் உபகரண வகையின் கீழ் கணக்கீடு செய்யப்படவில்லை. | சொத்து உபகரணப் பதிவேடு 2024 ஆம் ஆண்டின் சொத்து மெய்மையாய்வின் பின்னர், உரிய சொத்துக்கள் தீர்மானிக்கப்பட்டு பதிவேட்டில் சேர்க்கப்பட்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | வெளியிடப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் கோட்டை அலுவலகத்தில் நிறுவப்பட்ட வணிகச் சேவை நிலையத்திற்கு 7 கம்பனிகளிடமிருந்து ரூபா 4,869,826 பெறுமதியான சொத்துக்களை 2023 ஆம் ஆண்டில் நன்கொடையாகப் பெற்றிருந்த போதிலும், அந்தச் சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | வணிகச் சேவை நிலையத்தின் கட்டுமான மேம்பாட்டிற்காக நன்கொடையாகப் பெறப்பட்ட பொருட்களுக்கு தொடர்புடைய மானியங்களைச் செய்த தொழிலதிபர்களிடமிருந்து எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்தலைப் பெறுவதற்கும், அவற்றை பதிவேட்டில் உள்ளடக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபைக்கு மானியமாக பெறப்பட்ட சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக சேர்க்கப்பட வேண்டும். |
| (இ) | ஏற்றுமதியாளர்களின் பதிவுக் கட்டணம் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் வருமானம் ரூபா 28,305,500 என்றாலும், நிதி செயலாற்றல் கூற்றில் அந்த வருமானம் ரூபா 34,970,431, ஆனமையால் ரூபா 6,664,931 வேறுபாட்டினையும் ஏற்றுமதி சேவை கட்டண வருமானம் ரூபா 269,307,360 ஆன போதிலும், நிதி செயலாற்றல் கூற்றில் அந்த வருமானம் ரூபா 268,180,717 ஆகவும் காணப்பட்டமையால் ரூபா 1,126,643 ஆன வேறுபாடொன்று நிலவியது. | 2022 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்படாத பொருட்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 6 மில்லியன் மீதியை 2023 ஆம் ஆண்டு தொடர்பான வருமானக் கணக்குகளில் செலவு வைக்கப்பட்ட காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இனங்காணப்படாத வைப்புகள் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீளாய்வாண்டினுள் தொடர்பான பதிவுக் கட்டணங்கள் மற்றும் ஏற்றுமதி சேவை வருமானம் ஆகியவை நிதிக்கூற்றுக்களில் துல்லியமாக பிரதிபலிக்க வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக அதிகாரசபையிடம் இனங்காணப்படாத செலவு மீதிகள் ரூபா 8,018,127 மற்றும் இனங்காணப்படாத வரவு மீதிகள் ரூபா 5,184,737 இருந்த போதிலும், அந்த மதிப்புகளைத் தனித்தனியாகக் கணக்கிடாமல், அதன் தேறிய பெறுமதி ரூபா | பணம் வசூலிப்பதற்கும், விலைப்பட்டியல் வழங்குவதற்கும் முறையான கட்டமைப்பு இல்லாததால், இந்த இனங்காணப்படாத பண மீதிகளை நிதி நிலைமைக் கூற்றில் காட்ட வேண்டியுள்ளது. | இனங்காணப்படாத வரவு மற்றும் செலவு மீதிகள் அடையாளம் காணப்பட வேண்டும் மற்றும் அந்த பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2,833,390 என இனங்காணப்படாத செலவு மீதிகளாக நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | நிதி செயலாற்றல் அறிக்கையின்படி, மீளாய்வாண்டின் மிகை ரூபா 170,788,322 ஆக இருந்தபோதிலும், நிதி நிலைமைக் கூற்றில் திரண்ட நிதியில் ரூபா 167,993,514 செலவு வைக்கப்பட்டுள்ளதால், திரண்ட நிதி ரூபா 2,794,808 ஆல் குறைவடைந்துள்ளது. | திரண்ட நிதி ரூபா 2,794,808 இனால் குறைந்துள்ளதாக அதிகாரசபையின் தலைவர் ஒப்புக்கொண்டுள்ளார். | மீளாய்வாண்டின் மிகை நிதிக்கூற்றுக்களில் சரியாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஊ) | அரச கம்பனியொன்றுக்கு அதிகாரசபையால் வழங்கப்பட்ட கடன் தொகையான ரூபா 58,265,037 மேற்படி நிறுவனத்தினால் நேரடியாக நிதியமைச்சகத்திற்கு திருப்பிச் செலுத்தப்பட்டது. இந்த கடனை தீர்க்கும் போது கணக்கு வைக்கும் போது அந்த தொகையை அதிகாரசபையின் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டதால், மிகையானது அந்தத் தொகையால் குறைவடைந்திருந்தது. | கடனை தீர்க்கும் போது கணக்கு வைக்கும் போது மதிப்பாய்வின் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு சரிசெய்தல் எதுவும் செய்யப்படவில்லை. மீளாய்வாண்டின் வருமானத்திற்கு செய்யப்பட்ட சீராக்கமானது 2023 ஆம் ஆண்டில் பொது திறைசேரிக்கு அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட ஈட்டங்களின (Profit - Levi) செலவு வைத்தல் ஆகும். அதிகாரசபையிடம் உள்ள பணத்தில் காசோலை வழங்குவதற்கு பதிலாக, நேரடியாக திறைசேரிக்கு பணம் செலவு வைக்கப்பட்டுள்ளமையால் இவ்வாறு நிகழ்ந்துள்ளது. | பெற வேண்டிய கடன்கள் தீர்க்கப்படல் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ஆய்வக உபகரணங்கள் மற்றும் தளகாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கிரயம் முறையே ரூபா 51,113 அதிகரித்தும், ரூபா 35,190 குறைவாகவும் கணக்கு வைக்கப்பட்டு இருந்த காரணத்தால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் பிற வருமானம் ரூபா | 2023.12.31 ஆந் திகதி இந்த கணிப்பீடு தவறவிடப்பட்டுள்ளதுடன், இந்த தவறு 2024 ஆம் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பாவனையிலிருந்து அகற்றப்பட்ட சொத்துகளின் கிரயம் கண்டறியப்பட வேண்டும் மற்றும் அந்த பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் துல்லியமாக பிரதிபலிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 15,923 இனால் குறைந்துள்ளது. | | |
| (ஏ) | கப்ருக ஜெய இசுர கடன் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட கடன்களில் இருந்து, 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய குறுகிய கால கடன் தொகையான ரூபா 213,365,980 நடைமுறைச் சொத்துகளாக வகைப்படுத்தப்படாது மொத்த பெறுமதியும் நடைமுறை அல்லாத சொத்துகளாக கணக்கிடப்பட்டது. | அடுத்த 1 முதல் 7 ஆண்டுகளில் அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டிய தொகையை 2024.12.31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான இறுதிக் கணக்கு அறிக்கையிலிருந்து, அடுத்த ஆண்டில் வசூலிக்கப்படும் கடன் தவணைகள் தொடர்புடைய நடைமுறை சொத்துக்களாகவும், மீதமுள்ளவை நடைமுறை அல்லாத சொத்துக்கள் எனவும் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் நிலுவைத் தொகையை நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாதவை என கடன் பெற்ற காலத்திற்கு ஏற்ப வகைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | 1993 ஆம் ஆண்டு அதிகாரசபையில் பணிபுரிந்த கணக்காளர் செய்த ரூபா 2,000,000 மற்றும் ரூபா 434,688 மோசடிக்காக, மேற்படி உத்தியோகத்தராலல் முதலில் மோசடி செய்த தொகைக்கு ரூபா 2,500,000 நிறுவனத்திற்கு செலுத்தி மீதமுள்ள தொகைக்கு வட்டியும் சேர்த்து ரூபா 1,871,776 தொகை அதிகாரசபைக்கு பெற வேண்டியதாக கணக்கு வைக்கப்பட்டு, அவற்றுள் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ரூபா 543,360 அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய தொகையான ரூபா 1,328,415 எந்த ஒப்புதலும் இன்றி மீளாய்வாண்டில் கணக்குகளில் இருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் கணக்குகளில் எந்த வெளிப்பாடும் செய்யப்படவில்லை. | 2014.11.11 ஆந் திகதிய 521.13 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் ஆலைகள் எண். 68, 81 மற்றும் 344 பட்டியலிலிருந்து ஆலை எண் 128 ஐ நீக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், பணம் தவறாக பயன்படுத்தப்பட்ட இந்த மூன்று ஆலைகள் தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படும் வரை புத்தகங்களில் இருந்து பணத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், 2023 இல் புத்தகங்களில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையான ஒப்புதலின் அடிப்படையில் அறவிட வேணட்டிய மீதிகளை பதிவழிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் மற்றும் கணக்குகளில் தேவையான வெளிப்படுத்தல் செய்யப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 33(4) ஆம் பிரிவு | தேங்காய் மீது செஸ் வரி விதித்தல், அறவிடல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் செலுத்துதல் ஆகியவற்றுக்குத் தேவையான அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்தாலும், அதிகாரசபை இது தொடர்பாக எந்த உத்தரவையும் தயாரிக்கவில்லை. எவ்வாறாயினும், 2007 ஆம் ஆண்டு வரை ஆலை அபிவிருத்தி நிதியத்திற்கு செஸ் வருமானத்திலிருந்து மற்றும் அடுத்தடுத்த ஆண்டுகளில திறைசேரியின் மானியங்களில் இருந்து பெறப்பட்ட ஏற்றுமதி செய்யப்பட்ட ஒவ்வொரு 1 கிலோ கிராமுக்கு 20 சதம் என்ற அளவில் ஏற்றுமதி செய்யும் ஆலை உரிமையாளர்களின் பெயரில் கணக்குகள் பராமரிக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் 58 கணக்குகளில் ரூபா 44,000,497 மீதியொன்று இருந்தது. 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை, அந்தக் கணக்குகளில் இருந்து அந்தந்த ஆலை உரிமையாளர்களுக்கு ரூபா 11,814,955 திருப்பிச் செலுத்தப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில், ஆலை உரிமையாளர்களின் பாதுகாப்பு வைப்புத்தொகையிலிருந்து ரூபா 2,471,259 விலக்கு அளிக்கப்பட்டுள்ளதுடன், வருமானத்திலிருந்து எந்தத் தொகையும் விலக்கு அளிக்கப்படவில்லை. பிணை வைப்பு கணக்கில் மீதமுள்ள மீதிகள் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக செயலில் உள்ள ஆலைகளில் தேவைக்கேற்ப விடுவிக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய செஸ் வரியின் நடவடிக்கைகள் குறித்து அதிகாரசபையால் கட்டளைகளை தயாரித்து முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். |
| (ஆ) | 1975 இன் 24 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 இன் 46 ஆம் | ஏற்றுமதி செய்யப்படும் தேங்காய் உற்பத்திகளின் தரத் நியமங்களை அமைத்து பராமரிகத்தல் அதிகாரசபையால் | தயாரிப்பு சான்றிதழ் என்பது உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட முதல் ஒழுங்குமுறை மற்றும் தயாரிப்பு தர உத்தரவாத | அதிகாரசபையால் ஏற்றுமதி செய்யப்படும் தேங்காய் உற்பத்திகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் 51 ஆம் பிரிவு மற்றும் 1979 திசெம்பர் 31 ஆந் திகதிய 69/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் முதலாவது பட்டோலையின் 3 ஆம் பந்தி | மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், 2023 ஆம் ஆண்டில், ஐ.அ.டொலர் 277,510 மதிப்புள்ள தேங்காய் தொடர்பான உற்பத்திப் பொருட்கள் (புதிய தேங்காய் தவிர) ஐ.அ.டொலர் 172,685 இற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட போதிலும், அது தொடர்பில் எந்தவொரு பரிசோதனையும் மேற்கொள்ளப்படவில்லை. | முறையாகும். இங்கே, தயாரிப்புகளின் மாதிரிகளை எடுத்து அவற்றை பகுப்பாய்வு செய்வதன் மூலம், ஒட்டுமொத்த உற்பத்தி குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆனால் வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப முறைகள் மற்றும் அறிவின் மத்தியில் ஒரு பொருளின் தரம் தொடர்புடைய அமைப்புகளின் சான்றிதழால் தீர்மானிக்கப்படுகிறது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இங்கே தயாரிப்புகள் அல்ல, தொடர்புடைய உற்பத்தி முறை சான்றிதழுக்கு உட்படுகின்றது. இந்த கட்டமைப்பு சான்றிதழின் மூலம், தயாரிப்பு செயல்பாட்டின் போது தயாரிப்புகளின் தரத்திற்கு தீங்கு விளைவிக்கும் அனைத்து நிபந்தனைகளும் தடுக்கப்படும் அல்லது கட்டுப்படுத்தப்படுவதால், முழு தயாரிப்பின் தரமும் பாதுகாக்கப்படும். | தரம் தொடர்பான நியமங்களை தயார் செய்து, பேணிச் செல்லல் மற்றும் கண்காணித்தல் வேண்டும். |
| (இ) | 1987 திசெம்பர் 10 ஆந் திகதிய தெஅஅ/தி.பொ/மோ/87/15 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் 3 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | நாளாந்த தெங்கு பொருட்களின் உற்பத்தியை பரிசோதித்தல், மாதிரி எடுத்தல், தரத்தை உறுதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் தொடர்பாக ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற சிறப்புச் சந்தைகளுக்குப் பரிசோதனை செய்ய தினசரி உற்பத்தியில் 25 சதவிகிதம் மாதிரி எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு எடுக்கப்படும் மாதிரிகள் இலங்கை நியம விவரக்குறிப்புகளுக்கு இணங்க உள்ளதா என | 1987 ஆம் ஆண்டில், அந்தந்த நாடுகளில் உள்ள கொள்வனவாளர்களின் தேவைக்கு ஏற்ப, இந்த பரிசோதனையின் போது எந்த அடிப்படையில் மாதிரிகள் பெறப்பட வேண்டும் என்பது முடிவு செய்யப்பட்டது. தற்போது, மிகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையானது தயாரிப்பு சான்றிதழ் அல்ல என்பதுடன் தொடர்புடைய கட்டமைப்புகளின் சான்றிதழாகும், எனவே அத்தகைய சோதனையின் தேவைகள் அந்த | அதிகாரசபை வெளியிட்டுள்ள உள்ளக சுற்றறிக்கைகளுக்கு இணங்க வேண்டும் மற்றும் தேவையான சுற்றறிக்கைகளை திருத்தவும் அங்கீகரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டினுள் 5,082 மெட்ரிக் தொன் தேங்காய் அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட போதிலும், 10 சதவீத மாதிரிகள் மட்டுமே சோதனைக்காக சேகரிக்கப்பட்டிருந்தன. | நாடுகளில் இருந்து எழவில்லை. தென்னை அபிவிருத்தி அதிகாரசபையானது அனைத்து பூர்வீக தென்னை கைத்தொழில்களுக்கும் முறைமைச் சான்றிதழைக் கட்டாயப்படுத்தியுள்ளதால், 25% தொடர்ச்சியான அடிப்படையில் மாதிரிகள் பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br>எவ்வாறான போதிலும், கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட சுற்றறிக்கைகளை தற்காலத்திற்கு பொருத்தமானதாக மாற்றியமைப்பதற்கு 2024 இன் செயலநடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 170.79 மில்லியன் மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 98,651,996 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 72,136,326 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பரிசோதனைக்கூட வருமானம், புதிய தெங்கு துறை ஆராய்ச்சிகள் மற்றும் தயாரிப்புக் கட்டண வருமானம், இளநீர் துறை பரிசோதனைகள் மற்றும் தயாரிப்புக் கட்டண வருமானம் மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் முறையே ரூபா 35,265,218 இனால் மற்றும் ரூபா 97,091,468 இனால் ரூபா 59,807,950 இனால் மற்றும் ரூபா 37,561,675 இனால் அதிகரித்தமையும் தயாரிப்பு அபிவிருத்திப் பிரிவின் மூலதன அபிவிருத்தி செலவினம் ரூபா 11,813,364 இனால் குறைவடைந்தமையும் இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**2.2** 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் மானியங்கள் 35 சதவீதத்தினால் குறைந்துள்ளது மற்றும் பதிவுக் கட்டண வருமானம் 24.56 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மேலும், புதிய தேங்காய்களுக்கான ஆய்வுச் செயலாக்கக் கட்டணமும், இளநீருக்கான ஆய்வுச் செயலாக்கக் கட்டணமும் முறையே 228 சதவீதமும் 86 சதவீதமும் அதிகரித்துள்ளது. கொள்கலன் ஆய்வுக் கட்டண வருமானம் 31 சதவீதத்தால் குறைந்துள்ளதுடன் தேங்காய் வருமானம் 34 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. செயற்பாட்டு செலவுகள் 17 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் செயற்பாட்டுச் செலவினம் வருமானம் செயலாக்கம் மற்றும் அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றில் மூலதனம் மற்றும் அபிவிருத்திச் செலவுகள் முறையே 56 சதவிகிதம் குறைந்து 96 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு நடைமுறை மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் 5:1 மற்றும் 5:1 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அந்த விகிதங்கள் 6:1 மற்றும் 6:1 சதவீதமாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | துங்கன்னாவ தோட்டத்தில், 2021, 2022, 2023 ஆண்டுகளில் தென்னை உற்பத்தித்திறன் முறையே 72,460, 65,365 மற்றும் 57,289 ஆக இருந்தது. இவ்வாறாக, வருடாந்த தென்னை உற்பத்தித்திறன் கணிசமான அளவில் குறைந்து வருவதை அவதானித்ததோடு, 2021 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், மீளாய்வாண்டில் உற்பத்தித்திறனில் சுமார் 21 சதவீத வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. | தேங்காய் விளைச்சல் ஆண்டுக்கு ஆண்டு மாறுபடும். காலநிலை காரணிகள் மற்றும் உர பயன்பாடு நேரடியாக தேங்காய் விளைச்சலை பாதிக்கிறது. தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த தரவுகளின்படி, 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் ஒட்டுமொத்த தேங்காய் அறுவடை படிப்படியாகக் குறைந்துள்ளது. | தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | “தேங்காய் உற்பத்திகளை மொத்தமாக கொள்முதல் செய்து, விலை தளம்பலுக்கு ஏற்ப சந்தைக்கு விடுவித்தல்” என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் விலை ஸ்திரப்படுத்தும் நிதியத்தின் செயல்பாடுகள் சுமார் 37 வருடங்களாக இலக்குகளை அடைய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | இந்த நிதியத்தில் காணப்படும் பணம், தெங்கு தொழில்துறையை மேம்படுத்துவதற்காக தொழில்துறையினருக்கு நிதி வசதிகளை வழங்குவதற்காக இரண்டு கடன் திட்டங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவைக்கு ஏற்ப கடன் பணம் விடுவிக்கப்படும் வரை இவ்வாறு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. | நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | அதிகாரசபையால் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களின் தேங்காய் எண்ணெய் பொருட்களில் அஃப்லாடாக்சின் இல்லை என்பதை மற்றும் எந்த இரசாயனமும் சேர்க்காமல் இயற்கையாக உற்பத்தி செய்யப்படுகின்றன | ஐந்து நட்சத்திர சின்னத்துடன் தரமான தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்த தொழில் முயற்சியார்கள், தரமான தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்து அதிக விலைக்கு சந்தையில் வெளியிடுகின்றனர். 2022-2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட | நுகர்வோருக்கு மலிவு விலையில் தரமான பொருட்களை வழங்குவதற்கு, தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களின் உற்பத்திச் செலவைக் குறைக்க, அவர்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | என்பதையும் ஒட்டுமொத்த உற்பத்தி நடைமுறையும் நியமத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்படுவதாகவும் பரிசோதனை நடாத்தி வழங்கப்படும் 5 நட்சத்திர சான்றிதழ்கள் 25 இனை 2022 ஆம் ஆண்டில் 11 தேங்காய் தொடர்பான உற்பத்தி நிறுவனங்கள் பெற்றிருந்தாலும், அவை. 2022 ஆம் ஆண்டில் 5 நட்சத்திர சான்றிதழ்களைப் பெற்ற 7 நிறுவனங்கள் 2023 ஆம் ஆண்டில் 5 நட்சத்திர சான்றிதழ்களை 3 நிறுவனங்கள் மட்டுமே பெற்றுள்ளன. இதனால், உயர்தர தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்தும் ஆர்வம் குறைந்து வருவதை அவதானிக்க முடிந்தது. | பொருளாதார நெருக்கடியால், நுகர்வோர் சந்தையில் குறைந்த விலையில் தேங்காய் எண்ணெய் பொருட்களை மட்டுமே வாங்குவதால், ஐந்து நட்சத்திர இலட்சினை கொண்ட தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் அந்த தேங்காய் எண்ணெய் உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்தி, ஐந்து நட்சத்திரங்கள் இல்லாமல் தேங்காய் எண்ணெய் தயாரிக்க முற்பட்டுள்ளனர். இந்நிலையில், தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பரிசோதனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | நிதியுதவி, அறிவு மற்றும் பிற வசதிகளை அதிகாரசபை வழங்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் அதிகாரசபையானது உள்ளூர் சந்தையில் 101 கலப்பு தேங்காய் எண்ணெய் பரிசோதனைகளை மேற்கொண்டது மற்றும் 13 விலகல்கள் அடையாளம் காணப்பட்டன, ஆனால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களான சுகாதார அமைச்சு மற்றும் நுகர்வோர் அதிகாரசபைக்கு அறிவித்தல் அல்லது புகார் அளித்தல் இடம்பெறாமையால் அந்த பரிசோதனைகள் பலனற்றதாகியிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் சந்தை தேங்காய் எண்ணெய் மாதிரி ஆய்வுகளின் போது அடையாளம் காணப்பட்ட விலகல்களின் அடிப்படையில், அடையாளம் காணப்பட்ட கடைகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களுக்கு கள உத்தியோகத்தர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், கடைகளை அடையாளம் காண முடிந்தாலும், கடை உரிமையாளர்கள் பெரும்பாலும் இடைத்தரகர்கள் மூலம் தேங்காய் எண்ணெய் பொருட்களை வாங்குவதால், தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களை அடையாளம் காண்பதில் சிக்கல் எழுந்தது. கள உத்தியோகத்தர்கள் மூலம் இடைத்தரகர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டதுடன், தரமான தேங்காய் | உள்ளூர் சந்தையில் நடாத்தப்படும் பரிசோதனைகளை அதிகப்படுத்தி, முறைகேடுகளை உரிய அதிகாரிகளிடம் தெரிவித்து அவற்றை சரி செய்து, நுகர்வோருக்கு உயர்தர பொருட்களை வழங்கும் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எண்ணெய் விற்பனை குறித்து கடை உரிமையாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. | |
| (உ) | 2022 திசெம்பர் 27 ஆந் திகதிய பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 609/விற்பனை/02 இன் அடிப்படையில், பதிவு பெறாத ஒரு ஏற்றுமதியாளர், 03 சந்தர்ப்பங்களில் மட்டுமே பதிவு செய்யாமல் தேங்காய் தொடர்பான பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான தற்காலிக அனுமதி பத்திரங்களை வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில், தற்காலிக அனுமதிகள் வழங்கப்பட்ட 18 ஏற்றுமதியாளர்களுக்கு மேற்கூறிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு மாறாக 1 முதல் 5 மேலதிக் ஏற்றுமதி சந்தர்ப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சித் பிரிவின், வருடாந்த பதிவைப் பெறாத தொடர்புடைய ஆண்டு தொடர்பான தயாரிப்புகளுக்கான ஏற்றுமதியைத் தொடங்குவதற்கு முன், அவற்றின் இறக்குமதியாளர்களுக்கு தயாரிப்புகளின் மாதிரிகளை வழங்கி கட்டளைகளை பெற் உத்தேசித்துள்ள அல்லது உற்பத்தி அபிவிருத்தி பிரிவிற்கு விண்ணப்பிக்காத நிறுவனங்களுக்கு சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சித் பிரிவிலிருந்து ஒரு நிறுவனத்தின் சார்பாக வருடத்திற்கு 03 தற்காலிக அனுமதிகளை வழங்குவதற்கு சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏற்றுமதியாளர்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும், புதிய வாங்குபவர்களுக்கு நீண்ட காலமாக தங்கள் ஏற்றுமதியில் நம்பிக்கை வைப்பதற்கும் கடுமையான மற்றும் கடுமையான விதிமுறைகளுக்கு அப்பால் வசதிகளை வழங்கும் நோக்கத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட அனுமதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செல்லுபடியான பதிவின் மூலம் முறையான மற்றும் தரமான ஏற்றுமதிக்கு ஏற்றுமதியாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | புதிய தொழிலதிபர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவது தொடர்பாக வங்கியிடம் அதிகாரசபையால் பரிந்துரைகளை சமர்ப்பிக்க வேண்டியிருப்பதால், மாதிரி பரிசோதனையின் பிரகாரம், 32 நாட்கள் முதல் 105 நாட்கள் வரை விண்ணப்பங்களை | 2023 ஆம் ஆண்டில் கப்ருக ஜெய இசுர கடன் திட்டத்திற்கான விண்ணப்பங்களை பரிசீலிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதன்படி, கடன் பதிவுக்காக வங்கியில் இருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள் மேற்படி குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. குழுவின் பரிந்துரையைப் பெற்று, | தெங்கு உற்பத்தியாளர்களை முறையாகக் கண்டறிந்து, கடன் வசதிகளைப் பெறுவது தொடர்பான பரிந்துரைகள் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிந்துரை செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கடனைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது. | விண்ணப்பித்தவர்களில் சிலரின் விபர அறிக்கைகளைப் பெற்ற பிறகு, பரிந்துரைக்கப்பட்ட கடிதங்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளன. | |
| (எ) | அதிகாரசபையின் கோட்டை அலுவலகத்தின் தயாரிப்புப் அமைந்துள்ள பிரிவு முதல் தளத்தில் 1,183 சதுர அடி மற்றும் மூன்றாவது தளத்தில் 190 சதுர அடி பயன்படுத்தப்படாமல் இருப்பது பௌதீகப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டுக்கான முழு கட்டிடத்தின் மின்சார செலவினம் ரூபா 2,176,119 ஆக காணப்பட்டமையால், கணக்காய்வின் அவற்றுள் போது ரூபா 614,241 அல்லது 28 வீதம் குறைவாக பயன்படுத்தப்படு தரைத்தளத்தின் மின்சாரச் செலவு என்பதால் அந்த செலவினம் சிக்கனமற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது.. | இந்த அதிகாரசபையானது அதன் பணிக்கு ஏற்ப 05 பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது, இதில் தேங்காய் தொடர்பான உற்பத்தியாளர்கள் மற்றும் தேங்காய் தொடர்பான பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அதிக பங்களிப்பை வழங்கும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவு மற்றும் தயாரிப்பு அபிவிருத்தி பிரிவு ஆகியவை கோட்டை அலுவலக கட்டிடத்தில நிறுவப்பட்டுள்ளன. இது தவிர உள்ளக கணக்காய்பு பிரிவு மற்றும் நூலகமும் இந்த கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்த அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் ஏற்பட்ட தீ விபத்தால், அந்த தளத்தை சரி செய்ய வேண்டிய நிலையில், அந்த பழுதுபார்த்தல் நிறைவடைந்த பின்னர் அந்த தளத்தில் இந்த அதிகாரசபையின் உற்பத்தி அபிவிருத்தி பிரிவு நிறுவப்பட்டுள்ளது. | அதிகாரசபையின் அலுவலக வளாகத்தை அதிகபட்ச இயலளவுடன் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும |
| (ஏ) | ஜெய இசுர கடன் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பந்தி 13.4 இன் படி, கடன் விண்ணப்பதாரர்களின் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி செயற்திட்டத்தினுள் தொழில்நுட்ப பயிற்சி வணிகம், முகாமைத்துவ பயிற்சி மற்றும் பிற அடையாளம் காணப்பட்ட பயிற்சி திட்டங்கள் நிறுவன முகாமைத்துவ பயிற்சி திட்டத்திற்குள் | 2023 ஆம் ஆண்டின் போது தேங்காய் எண்ணெய் நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்படும் போது இந்த கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதுதவிர கண்காட்சி இடங்களில் உள்ள குடில்களிலும் கடன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, அரச நிதியை முகாமைத்துவம் செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கப்ருக ஜய இசுர | ஒப்பந்தத்தின்படி, முயற்சியாண்மை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான ஒருங்கிணைப்பு முறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒழுங்கமைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட வேண்டும், ஆனால் அதிகாரசபையால் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | கடன் திட்டம் தொடர்பில் தனியான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவில்லை. | |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 50 கணினி டேப்லெட்டுகளை வாங்குவதற்கான பெறுகையில் ஒரு நிறுவனத்திடமிருந்து ரூபா 117,700 ஆரம்ப விலையில் பெறப்பட்டது, பின்னர் அந்த விலை பொருட்படுத்தாமல் மீண்டும் விலை கோரப்பட்டு, அதே நிறுவனத்திடம் இருந்து 46 டெப்லட் கணினிகள் ரூபா 150,800 தொகைக்கு வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் அதிகாரசபைக்கு ரூபா 1,522,600 நிதி நட்டமொன்று ஏற்பட்டது. | 4 GB RAM திறன் கொண்ட டேப்லட் கணினிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள் ரூபா 117,700.00 விலையானது, 6 GB RAM திறன் கொண்ட டேப்லட் கணினிகளை வாங்குவதற்கு விலைகள் கோரப்பட்ட போது மாற்றுத் தெரிவாக (option) சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையாகும். இரண்டாவது சந்தர்ப்பத்தில் 4 GB RAM திறன் கொண்ட டேப் கம்ப்யூட்டர்களை வாங்குவதற்கு விலைகள் அழைக்கப்பட்டன, மேலும் இரண்டு விலை அழைப்புகள் இருப்பதால், முதல் விலை அழைப்பில் வழங்கப்படும் விலைகளை இரண்டாவது விலை அழைப்பில் பயன்படுத்த முடியாது. | முன் கொள்முதல் திட்டங்கள் முறையாகத் தயாரிக்கப்பட்டு, அதிகாரசபையின் தேவைகளுக்கு ஏற்ப விலைக்கேள்வி கோரப்பட்டு பெறுகை நடவடிக்கைகள் நிறுவனத்திற்கு மிகவும் சாதகமான முறையில் நடத்தப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையால் ரூபா 1,103,915 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 28 Lux meters மற்றும் 27 JR Thermometers என்பன 2023 திசெம்பர் 8 மற்றும் 2023 ஒக்தோபர் 30 ஆந் திகதி அதிகாரசபைக்கு கிடைத்தன, ஆனால் அந்த உபகரணங்கள் அனைத்தும் 2024 பிப்ரவரி 29 வரை களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருந்த காரணத்தால் ஒரு வருடத்திற்கான உத்தரவாத காலம் விளைவற்ற முறையில் கடந்து போகின்றமை | தற்போது இந்த பொருட்கள் சம்பந்தப்பட்ட கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் அந்தந்த செயல்பாடுகளில் பயன்படுத்தப்படுவதையும், அத்தியாவசியமற்ற கொள்முதல் செய்யப்படாமல் இருப்பதையும் கட்டுப்பாட்டு அதிகாரசபை உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | மீளாய்வாண்டுக்காக அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தின் 02 விடயங்கள் நடைமுறைப்படுத்தப் படாமலேயே தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டன மற்றும் மீளாய்வாண்டில் 10 செயற்திட்டங்களை நிறைவுசெய்ய முடியவில்லை. மேலும் பெறுகைகள் திட்டங்களை தயாரிக்கும் போது அது தொடர்பான பணிகளை ஆற்றும் திறன் குறித்து முறையான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினங்களைத் தொடங்குவதற்கு 2023.07.29 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டதுடன் அதன் பிறகு அங்கீகரிக்கப்பட்ட பணிகள் தொடங்கப்பட்டன. மீளாய்வாண்டினுள் முடிக்கப்படாத பணிகளில், தொழிலாளர்களுக்கான கழிப்பறை கட்டுதல் Construction of Toilet for Workers மற்றும் Renovation of Toilets (3) for staff ஆகிய பணிகளில், 2023.08.07 ஆந் திகதி விலைக்கேள்வி அழைக்கப்பட்டு, 2023.10.11 அன்று ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இதன்போது, நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் துங்கன்னாவ பிரதேசத்தில் மழை காரணமாக கட்டுமானப்பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. செயலாற்றல் பிணையின் காலத்தை நீடித்தும் அதற்கான ஒப்பந்தப் பணிகளை 2023.12.31 இல் முடிக்க முடியவில்லை. | உரிய நேரத்தில் மற்றும் செயற்திறனான முறையில் பெறுகைத் திட்டங்களை தயாரித்தது அதற்கு தேவையான திருத்தங்களும் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | அரச பெறுகைகள் வழிகாட்டியின் 5.4.10 மற்றும் 8.9.1 ஆம் பந்திகளுக்கு இணங்காத வகையில் 2023 திசெம்பர் 21 ஆந் திகதி ரூபா 8,040,715 மதிப்புள்ள டேப்லெட் கணினிகள், தெர்மாமீட்டர்கள் அரசு லக்ஸ் மீட்டர்களை வாங்குவதற்கான ஒப்பந்தத்தை வழங்கும் நேரத்தில், செயலாற்றல் பிணைமுறி எதுவும் பெறப்படவில்லை மற்றும் வழஙகுநர் நிறுவனத்துடன் எந்த ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டிருக்கவி | 2018 ஆம் ஆண்டு கள உத்தியோகத்தர்களுக்காக பெறப்பட்ட 41 டேப் கணினிகள் 2019 ஆம் ஆண்டு முதல் 05 வருடங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. Zoom தொழில்நுட்பம் மற்றும் Whatsapp தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கள உத்தியோகத்தர்கள் செயலாக்க அபிவிருத்திப் பிரிவின் உயர் முகாமைத்துவத்துடன் தொடர்புகொள்வதுடன், 2018 ஆம் ஆண்டில் வாங்கிய டேபலட் கணினிகளை | அரச நிதி உச்சமாக் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ல்லை. அதிகாரசபையின் கள உத்தியோகத்தர்களுக்கு 2018 திசெம்பர் 28 மற்றும் 2019 நவம்பர் 3 ஆகிய திகதிகளில் 41 டேப்லெட் கணினிகள் வாங்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டு, 4 ஆண்டுகளுக்குள் அந்த உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் 46 டேப்லெட் கணினிகள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பயன்படுத்தி, உத்தியோகத்தர்கள் தற்போது தங்கள் பணிகளையும் தரவு கட்டமைப்புகளை அணுகுவது மற்றும் பிற உத்தியோகபூர்வ பணிகளை மேற்கொள்ளும் போது 05 வருடங்களாக பழைய டேப் கணினிகளை பயன்படுத்தி திறமையாக பணிகளை செய்ய முடியாது. மேலும் பெரும்பாலான டேப்லட் கணினிகள் பழுதடைந்துள்ளன. | |

## 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரசபையின் 1,162 சதுர அடி பரப்பளவான தரை தளத்தைப் பயன்படுத்தி நிறுவப்பட்ட வணிக சேவை நிலையத்தின் ஊடாக வாடிக்கையாளர் பிரச்சனைகளை தொலைபேசியில் தீர்க்க ஒரு தொலைபேசி அழைப்பு பிரிவு, வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக வைரம், பிளாட்டினம், தங்கம் மற்றும் வெள்ளி உறுப்பினர் அட்டைகளை அறிமுகப்படுத்தி வெளிநாட்டு வாடிக்கையாளர்களை அடையாளம் காண வாடிக்கையாளர் பராமரிப்பு பிரிவு, அதிகாரசபையால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு தேங்காய் தொடர்பான தரவுகளை வழங்குவதற்காக சந்தைப்படுத்தல் நுண்ணறிவுப் பிரிவையும், தரமான பாதுகாப்பு, செயலாக்க மேம்பாடு | தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் கோட்டை காரியாலயத்தின் தரைத்தளத்தில் நிறுவப்பட்டுள்ள வர்த்தக சேவை நிலையத்தின் பிரதான நோக்கமானது, இலங்கையிலுள்ள தேங்காய் தொடர்பான பொருட்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு தேங்காய் தொடர்பான உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கான பிரதான மையமாக செயற்படுவதாகும். தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் சேவைகள், தேங்காய் தொடர்பான உற்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் உடனடி சேவையாக வழங்கப்படுவதுடன், சர்வதேச சந்தையில் இலங்கையின் தேங்காய் தொடர்பான உற்பத்திகளுக்கு தனித்துவமான வர்த்தக நாமம் வழங்கப்படும் எனவும் இதன் மூலம் மேலும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தற்போதைய சூழ்நிலையால் பல தொழில் | முறையான சாத்தியக்கூறு ஆய்வுக்குப் பிறகே திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டங்களை திறம்பட செயல்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகளின் தகவல்களை வழங்குவதற்கும் தகவல்களைச் சேகரிப்பதற்கும் ஒரு தகவல் தொழில்நுட்ப பிரிவையும், இந்த நிலையத்தின் அனைத்து செயற்பாடுகளையும் திட்டமிடுவதற்கு திட்டமிடல் பிரிவையும் உள்ளடங்களாக 5 அலகுகளை கொண்டதாக இந்த நிலையத்தின் பணிகளை மேற்கொள்ள அதிகாரசபை திட்டமிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் மேற்கூறிய பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. | முயற்சியாளர்கள் தங்கள் சேவைகளை இணையதளத்தில் பெற வேண்டும் என்ற ஆர்வத்தால் இந்த நிலையத்திற்கு வருகைதரும் எண்ணிக்கை குறைவடைவதை காணக்கூடியதாக உள்ளது. வந்துள்ளனர். | |
| (ஆ) | தேங்காய் நார் கைத்தொழில் அபிவிருத்திக்கான பயிற்சி நிலையமாக 2006 ஆம் ஆண்டு துங்கன்னாவ தேங்காய் நார் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் நிறுவப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டு பயிற்சி வகுப்புகள் எதுவும் நடைபெற்றிராமை, தொழிற்சாலையிலுள்ள 18 இயந்திரங்களில் 14 இயந்திரங்கள் செயலிழந்திருந்தமை மற்றும் செயற்பாட்டு நிலையில் உள்ள இயந்திரங்களும் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்ற காரணத்தால் பயிற்சி நிலையத்தை அமைப்பதன் நோக்கங்கள் நிறைவேற்றப்படாமல் இருப்பதும், தற்போதுள்ள அனைத்து சொத்துக்களும் சிதைவடைந்து வருவதும் அவதானிக்கப்பட்டது. | துங்கன்னாவ தேங்காய் நார் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் இயந்திரங்களை பராமரிப்பது அல்லது காலாவதியான இயந்திரங்களை அகற்றி புதிய இயந்திரங்களை நிறுவி அவற்றை மீண்டும் செயற்படுத்துவது என்பது பாரிய செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணி என்பதால் மற்றும் அதிகாரசபையின் தாபனவிதிக் கோவையின், நிதிப் பிரமாணத்தின் சட்டங்கள், விதிகள் மற்றும் கட்டளைச் சட்டங்களின் பிரகாரம் மேற்கொள்ளல் நடைமுறையில் சாத்தியமற்றது என்பதால் கடந்த கோப் குழுவில் வழங்கப்பட்ட அறிவுரைகளை அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறையினரதும் தலையீட்டுடன் (Public-Private Partnerships) இந்த பணியை மேற்கொள்வதற்கு தேங்காய் நார் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுடன் கலந்தாலோசித்து, இப்பணிகளை மேற்கொள்ள மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சொத்துக்களின் செயற்திறனாக மற்றும் ஆக்கபூர்வமான பயன்பாட்டை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிதகைமையும் நல்லாலுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டுக்கான அதிகாரசபையின் செயல் திட்டத்தின்படி, ஏற்றுமதியை விரிவுபடுத்துதல், ஏற்றுமதியை பல்வகைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல், உற்பத்தியை 5 சதவீதம் விரிவுபடுத்துதல் மற்றும் தென்னை உற்பத்திகள் தொடர்பான செயலாக்க மேம்பாட்டுத் பிரிவினை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான 6 பணிகளில் 168 பௌதீக இலக்குகள் காணப்பட்ட போதிலும், அவற்றில் 23 பௌதீக இலக்குகள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், பௌதீக இலக்குகளை அடைவதற்கான சதவீதம் 1 முதல் 60 சதவீதம் வரையாக காணப்பட்டது. | தேங்காய் தொடர்பான ஏற்றுமதி பிணக்குகளை தீர்ப்பது - ஏற்றுமதி தொடர்பான சுமார் 06 முறைப்பாடுகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2023 இல் ஏற்றுமதி தொடர்பான ஒரு முறைப்பாடு மட்டுமே அதிகாரசபைக்கு கிடைத்தது. ஏற்றுமதியை பல்வகைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குவதன் கீழ் 2 ஆய்வுகள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டாலும், ஒரு கணக்கெடுப்பு 2023 இல் நிறைவடைந்துள்ளது. P2 திட்டத்தின் கீழ், தென்னை முக்கோண வலயத்திற்கு வெளியே புதிய தொழிற்சாலைகள் அமைப்பது குறித்து வெளி தரப்பினருடன் இணைந்து செய்யும் பணி என்றும், தொழில்முனைவோர் அது தொடர்பில் கோரிக்கை வைத்தால், அதிகாரசபையால் ஆய்வு செய்து தொழில் தொடங்க அனுமதி வழங்கப்படும். 2023 ஆம் ஆண்டில், தரமான தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்ய தொழில்துறையினரைக் கற்பிக்கும் 20 பயிற்சி நிகழ்ச்சிகள் ஆண்டு முழுவதும் நடத்த திட்டமிடப்பட்டது, ஆனால் அவற்றில் 07 மட்டுமே நடாத்தப்பட்டுள்ளன. | முறையான சாத்தியக்கூறு ஆய்வுக்குப் பின்னரே செயற்திட்டங்களைத் தயாரித்து திறம்பட செயல்படுத்த வேண்டும். |